சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்.

முன்னிலை - திரு.M.சண்முகவேல்ராஜ், B.A., B.L., L.L.M.,

சார்பு நீதிபதி, இராஜபாளையம்.

2024 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 14 ம் நாள் வியாழக்கிழமை

இ.ம.எண்.04/2024

உள்

அ.வ.எண்.364/2024

(CNR No:TNVR230000112024)

----

1) லிங்கம் (இறந்துவிட்டார்)

2) பாக்கியம் ... மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள்

/எதிர்/

திலகம் ... எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனுவானது என் முன்பாக 23.10.2024 அன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.பொன்னுச்சாமி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.போஜராஜன் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், வழக்காவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ...

உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 9ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், தாவா மனுவில் கண்ட சொத்துக்கள் அடங்கிய புல எண்கள்.176/1 மற்றும் 176/3A ல் கண்ட சொத்துக்களை வருவாய்த்துறையின் பழைய ஆவணங்கள் சகிதம் அளந்து அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்</u>:-

மனுதாரர் அசல் வழக்கில் 2ம் பிரதிவாதி ஆவார். தாவா வழக்கின் 1ம் பிரதிவாதி மனுதாரரின் தகப்பனார். 1ம் பிரதிவாதி வழக்கு நிலுவையில் இருக்கும்போது இறந்துபோய்விட்டார். 1ம் பிரதிவாதி இறந்த பின்னர் தாவா அசல் வழக்கு விசாரணைக்கு போடப்பட்டு வாதி தரப்பில் 1, 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டது. தாவா வழக்கில் கண்ட சொத்துக்கள் ஆதியில் அயன் புஞ்சை சர்வே 176/1 மற்றும் 176/3A ல் அடங்கியதாகும். மேற்படி சர்வே எண்.176/1 ன் மொத்த விஸ்தீரணம் 72 செண்டாகும். அதேபோன்று சர்வே எண்.176/3A ன் விஸ்தீரணம் 70 செண்டாகும். ஆக மொத்தம் 1 ஏக்கர் 42 செண்ட் நிலம் மனுதாரரின் தகப்பனாருக்கு பாகத்தின் மூலம் கிடைக்கப்பெற்றதாகும். மேற்படி சொத்துக்களைப் பொறுத்து மோசடியாக பத்திரங்கள் பதிவு செய்துள்ளனர். மேலும், மேற்கண்ட சொத்துக்களுக்கு வருவாய்த்துறை மூலம் முறையாக விசாரணை மேற்கொள்ளாமல் புல எண்.176/3A1 மற்றும் 176/17, 18, 19 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/வாதியும் அவரைச் சேர்ந்த நபர்களான செல்லத்துரை, இந்துராணி ஆகியோர்கள் முத்தையா தேவர் மகன் அய்யனாரிடம் மோசடியாக பவர் பத்திரத்தின் அடிப்படையில் சொத்துக்களை கிரையம் பெற்றுக்கொண்டு மனுதாரர்கள் அனுபவத்தில் உள்ள சொத்தைப் பொறுத்து வீண் இடைஞ்சல் செய்து வருவதோடு மட்டுமின்றி வழக்கு தாக்கல் செய்துள்ளனர். மேற்படி சர்வே எண்.176/1 மற்றும் 176/3A ல் கண்ட சொத்துக்களில் எதிர்மனுதாரர்/வாதிக்கோ, மற்றவர்களுக்கோ சட்டப்படி பாத்தியதையோ, உரிமையோ கிடையாது. மேலும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கில் கண்ட சொத்துக்களை இராஜபாளையம் தாலுகா பிர்க்கா சர்வேயருடன் சொத்துக்களை

அளந்து அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு இ.ம.எண்.43/2016 என நம்பராகி அதில் மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, இடத்தைப் பார்வையிட்டு அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்துள்ளார். மேற்படி நீதிமன்ற ஆணையர் சர்வே எண்.175/1 மற்றும் 176/3A ல் கண்ட சொத்து முழுவதையும் அளக்கவில்லை. தாவா மனுவில் கண்டுள்ள சொத்துக்கள் புல எண்.176/3A ல் உட்பிரிவு செய்யப்பட்டதாகும். மேற்படி முத்தையா மகன் அய்யனார் அங்கப்ப பிள்ளைக்கு புல எண்.176/1 மற்றும் 176/3A ல் கண்ட சொத்தினை பத்திரப்பதிவு செய்து கொடுக்கவில்லை. மேற்படி அங்கப்பபிள்ளை இறந்தபிறகு எதிர்மனுதாரர்/வாதியும் மற்ற நபர்களான இந்துராணி, செல்லத்துரை ஆகியோரும் முத்தையா மகன் அய்யனாரிடம் சீர்திருத்தப்பத்திரம் எழுதி வாங்கியுள்ளனர். மேற்படி பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதா? என்பதை நீதிமன்றம் தீர்மானிக்கக்கூடிய விஷயமாகும்.

எதிர்மனுதாரர்/வாதியும் அவரது வகையறாக்களும் மோசடியான ஆவணங்களை உற்பத்தி செய்து வைத்துக்கொண்டு மனுதாரர்களுக்கு வீண் இடைஞ்சல் செய்து வருகின்றனர். தாவா வழக்கில் கண்ட சொத்துக்கள் அடங்கிய பகுதியான சர்வே எண்.176/1 மற்றும் 176/3A சொத்துக்களை வருவாய்த்துறை ஆவணங்களின்படி அளக்கும்பட்சத்தில் உண்மை நிலவரம் தெரியவரும். மேலும், நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்தில் சர்வே எண்.176/1 மற்றும் 176/3A சம்பந்தமாக தெளிவாக குறிப்பிடவில்லை. இந்நிலையில் தாவா மனுவில் கண்ட சொத்துக்கள் அடங்கிய சர்வே எண்.176/1 மற்றும் 176/3A ல் கண்ட சொத்துக்களை வருவாய்த்துறையின் பழைய

ஆவணங்கள் சகிதம் அளந்து அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் இருக்கிறது. அவ்வாறு நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்வதனால் எதிர்மனுதாரர்/வாதிக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. மேலும், மனுதாரர்கள் தரப்பு வாய்மொழி சாட்சியத்தை குறைக்க வாய்ப்புடையதாக உள்ளது. மேலும், மனுதாரர்கள் தரப்பு கட்சியையும் எளிதாக நிரூபிக்க இயலும். தாவா அசல் வழக்கின் தன்மையும் பாதிக்கப்போவதில்லை. எனவே, தாவா மனுவில் கண்ட சொத்துக்கள் அடங்கிய புல எண்கள்.176/1 மற்றும் 176/3A ல் கண்ட சொத்துக்களை வருவாய்த்துறையின் பழைய ஆவணங்கள் சகிதம் அளந்து அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து உத்தரவிடக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரைகளின் சுருக்கம்</u>:-

எதிர்மனுதாரர் அசல் வழக்கின் வாதி ஆவார். தாவா அசல் வழக்கில் எதிர்மனுதாரரின் கணவர் வா.சா.1 ஆகவும், அய்யனார் என்பவர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, கடந்த 13.06.2024 ம் தேதியில் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் விசாரணை முடிக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பு விசாரணைக்காக 26.06.2024 ம் தேதியில் வாய்தா ஏற்பட்டிருந்தது. மேற்படி தேதியில் மனுதாரர்கள் தரப்பில் விசாரணை மேற்கொள்ளாமல் தபசில் சொத்துக்களை அதாவது சர்வே எண்.176/1 மற்றும் 176/3A ல் கண்டுள்ள சொத்துக்களை வருவாய் துறையில் பழைய ஆவணங்கள் மூலம் அளந்து அறிக்கை, வரைபடம் தாக்கல் செய்ய ஆணையர் நியமனம் செய்ய வேண்டுமென மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா அசல் வழக்கில் எதிர்மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை மனுதாரர்கள் சட்ட விரோதமாக ஆக்கிரமிப்பு செய்ததன் காரணமாக ஆக்கிரமிப்பு பகுதியினை கண்டறிய ஆணையர் நியமனம் செய்யக்கோரி இ.ம.எண்.43/16 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனு இறுதி விசாரணைக்கு பின்பு ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை, வபைடம் மற்றும் நில அளவை வரைபடம் ஆகியவை C1 to C3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் விசாரணையும் முடிக்கப்பட்டது. வா.சா.1 விசாரணையின்போது எதிர்மனுதாரரின் கணவரை மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபோது, ச.எண்.176/3 மற்றும் 176/3A ஆகியவை குறித்து, “எனது மாமனார் அங்கப்பன் சர்வே எண்.176/3 மற்றும் 176/3A ல் உள்ள பிளாட்டு எண் 1, 2 மனைகளை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 சீர்திருத்த பத்திரத்தில் சர்வே எண்கள் 176/3 ல் 72 செண்டில் மையம் 8 செண்டும், அயன்புஞ்சை சர்வே எண்.176/3A ல் 70 செண்டில் மேல்பாதி செண்டு 35 ஆக மொத்தம் 43 செண்ட் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான்” என்று கேள்விகள் கேட்கப்பட்டுள்ளது.

ஆணையர் அறிக்கை குறித்து தவறு என்றோ, சரியாக அளவீடு செய்யவில்லை என்றோ சொத்துக்கள் அடையாளம் காணப்படவில்லை என்றோ எவ்வித ஆட்சேபணையும் செய்யப்படவில்லை. ஆணையர் தாக்கல் செய்துள்ள நீ.ம.சா.ஆ.1 முதல் 3 ஐ ரத்து செய்து வேறொரு ஆணையரை நியமனம் செய்ய வேண்டுமென்று எவ்வித பரிகாரமும் கோரவில்லை. அதேபோன்று தற்போது தாக்கல் செய்த மனுவில் சர்வே எண்.176/1 மற்றும் 176/3A ல் உள்ள சொத்துக்கள் ஸ்தலத்தில் இல்லை என்றோ

அவைகள் சரியாக அளக்கப்படவில்லை என்றோ எவ்வித சாட்சியும் செய்யவில்லை. இந்நிலையில் எதிர்மனுதாரர்/வாதி மோசடியாக ஆவணங்களை உற்பத்தி செய்து தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளார் எனவும், தாவா வழக்கில் அடங்கிய சர்வே எண்.176/1, 176/3A சொத்துக்களை வருவாய்த்துறை ஆவணங்களின்படி அளக்கும்பட்சத்தில் உண்மை நிலவரம் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தில் சர்வே எண். 176/1, 176/3A சம்பந்தமாக தெளிவாக குறிப்பிடப்படவில்லை. எனவே, வருவாய்த்துறையில் பழைய ஆவணங்களின் அடிப்படையில் மீண்டும் அளவீடு செய்ய வேண்டுமென தாவா மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கையுடன் சர்வே எண்.176 க்கான சர்வே வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அது தவிர எதிர்மனுதாரர் கிரையம் பெற்றுள்ள சொத்திற்கான பயிரடங்கல் ஆணையர் அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் சர்வே எண். 176/1, 176/3A அடங்கிய சொத்துக்கள் ஸ்தலத்தில் இருப்பதாக எதுவும் குறிப்பிடப்படவில்லை. மாறாக, சர்வே எண்.176 என்பது பல உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு வழக்கிடை சொத்திற்கு சர்வே எண்.176/18 என உட்பிரிவு செய்யப்பட்டு அதற்கு எதிர்மனுதாரர் பெயரில் தனித்து பட்டாவும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், அதற்கு முன்பாக நியமனம் செய்யப்பட்ட ஆணையர் தனது அறிக்கையில் தபசில் சொத்து அமைந்துள்ளது குறித்து, நில அளவையர் அவர்களால் தாவா சொத்தினை வருவாய்த்துறை ஆவணங்களின் அடிப்படையில் இனங்கண்டு அளந்து காட்டினார். அந்த விஸ்தீரணம் வருவாய்த்துறை புல வரைபடத்தோடு ஒத்து போனது" என்று குறிப்பிட்டள்ளார். தாவா சொத்தில் பிரதிவாதிகள் காரைச்சுவர் சிமெண்ட் ஓடு பதிக்கப்பட்டு தென்வடல் 20 அடி கிழமேல் வடபக்கம் 12 அடி, தென்பக்கம் 11.48 அடி

கொண்ட வீடு கட்டியுள்ளார். அது சிவப்பு நிறத்தில் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்தை ஒட்டி தென்வடல் 7.5 அடி, கிழமேல் 11.48 அடி கொண்ட கம்புகளால் ஊன்றப்பட்ட பிரதிவாதிகளின் காரை வீடும் உள்ளது. சர்வே எண். 176/3A1, 176/A1 அமைந்துள்ள பாதைகளிலும் 5 அடி சேர்த்து வேலி அமைக்கப்பட்டுள்ளது. சர்வே எண்.176/18 ல் அமைந்துள்ள அவருடைய இடத்தில் நான் வரைபடத்தில் காட்டியுள்ள JGHK. FJKJ, LMNO மற்றும் PQRS ஆகிய பகுதிகள் பிரதிவாதிகளால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியாகும் என்று குறிப்பிட்டுள்ளனர். பிராது சொத்தும், அதனை சேர்ந்த சொத்தும் வீட்டு மனைக்காக பல பிளாட்டுகளாக பிரிக்கப்பட்டு பல நபர்களுக்கு கிரையம் செய்யப்பட்டுள்ளது. எனவே, பழைய சர்வே ஆவணங்கள் பூமியிலும், வருவாய்த்துறையிலும் இல்லாத நிலையில் தபசில் சொத்துக்களை பழைய வருவாய் ஆவணங்களின் கீழ் அளக்க வேண்டுமென கூறி இருப்பதின் நோக்கம் என்னவென்று கூறவில்லை. மேலும், தாவா வழக்கிற்கு சம்பந்தம் இல்லாத ஆவணங்களைக் கொண்டு அளவீடு செய்ய வேண்டுமென கூறியிருப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், தாவா வழக்கிடை சொத்துக்கனை நீதிமன்றம் மூலம் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, ஆணையர் வழக்கிடை சொத்துக்களை சர்வேயர் உதவியுடன் பார்வையிட்டுள்ளார் என்று கூறியுள்ளதற்கு மாறாக தாவா மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தபசில் சொத்தினை ஆதியில் 1ம் மனுதாரரும், அவருடைய வகையாட்களும் சேர்ந்து முத்தையா தேவருக்கு வா.சா.ஆ.2 ன்படி கிரையம் செய்து கொடுத்துள்ளார். அதனை மறைத்து தற்போது கட்சி செய்திருப்பது தவறாகும். முத்தையாத்தேவர்

வா.சா.ஆ.2 ன் படி கிரையம் பெற்றது குறித்து முத்தையாத்தேவர் தனது மகனுக்கு எழுதிக் கொடுத்த வா.சா.ஆ.3 பொது அதிகார ஆவணத்தின்படி பல பிளாட்டுகளாக பிரித்து வா.சா.ஆ.4 மூலம் தனது மனைவியின் தகப்பனாருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார். மேற்படி கிரையங்கள் அனைத்தையும் மறைத்து தபசில் சொத்தினை மீண்டும் அபகரிக்கும் நோக்கத்துடன் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தபசில் சொத்தினை கிரையம் கொடுத்த முத்தையாத் தேவர் மகன் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படியாரிடம் தபசில் சொத்துக்களை பல பிளாட்டுகளாக பிரித்து விற்பனை செய்யப்பட்டு உள்ளது குறித்து தெளிவாக கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர் கூறுவதுபோன்று பழைய வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் நில அளவை செய்ய இயலாது என்பதை நன்கு அறிந்து கொண்டு வழக்கை மேலும் காலம் கடத்த வேண்டுமென்ற காரணத்திற்காக தாவா மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே தாக்கல் செய்த ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை நீக்கரவு செய்யாத நிலையில் தாவா மனுவினை அனுமதிப்பது சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. தாவா அசல் வழக்கில் தீர்வு காண்பதற்கு மீண்டும் ஆணையர் நியமயம் செய்ய வேண்டிய அவசியமில்லை. இந்நிலையில் தாவா மனுவினை தள்ளுபடி செய்வதினால் மனுதாரருக்கு எவ்வித பாதிப்பும், இழப்பும் ஏற்படப்போவதில்லை. எனவே, மனதாரர்களின் தாவா மனுவினை எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும் இல்லை. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

7. **தீர்வு**:-

இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. ஆவணங்களை பரிசீலனை செய்ததில், மனுதாரர்கள் அசல் வழக்கின் பிரதிவாதிகள். அசல் வழக்கின் வாதி/எதிர்மனுதாரர் பிரதிவாதிகளுக்கு எதிராக அசல் வழக்கை 1, 2 தபசில் சொத்துக்கள் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம், சுவாதீன மீட்புரிமை பரிகாரம் மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கு தாக்கல் செய்யும்போது சொத்தினை சர்வேயர் உதவியுடன் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய வேண்டுமென்று மனு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனுவின்படி நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில், பிரதிவாதிகள் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்த பின்பு எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, வாதியின் கணவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.1ன் மூலமாக வா.சா.ஆ.1 முதல் 14 வரையிலான ஆவணங்களும், நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் நீ.ம.சா.ஆ.1 முதல் 3 குறியீடு செய்யப்பட்டு, மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டு, சாட்சி அய்யனார் என்பவர் வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு, குறுக்குவிசாரணை செய்யப்பட்ட பின்பு அசல் வழக்கின் வாதி தரப்பு சாட்சியத்திற்காக

வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின்போது தாவா சொத்துக்கள் அடங்கிய சர்வே எண்.176/1 மற்றும் 176/3A முழுவதும் அளக்கப்படவில்லை என்றும், மொத்த சொத்தையும் அளந்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வேண்டி நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய வேண்டுமென்றும், எனவே மனுவை அனுமதிக்க வேண்டுமென்று எடுத்துரைக்கப்பட்டது.

9) எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின்போது, நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தினைப் பொறுத்து மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கில் ஆட்சேபணை தெரிவிக்கப்படவில்லை என்றும், சொத்தின் இயற்கை தன்மை மாற்றப்படவில்லை என்றும், நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தினைப் பொறுத்து ஒப்புக்கொண்டு வா.சா.1 ஐ குறுக்குவிசாரணை செய்துள்ளார்கள் என்றும், சர்வே எண்.176/1, 176/3A ஆகிய சொத்துக்கள் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே வருவாய்த்துறையினரால் உட்பிரிவு செய்யப்பட்டுவிட்டது என்றும், அதன்பின்பு தான் நீதிமன்ற ஆணையர் சொத்தினை அளந்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், நீ.ம.சா.ஆ.1 முதல் 3 ஐ பொறுத்து ஆட்சேபணை தெரிவிக்கப்படவில்லை என்றும், மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் வாதுரை செய்தார்.

10) ஆவணங்களை பரிசீலனை செய்ததில், அசல் வழக்கானது விளம்புகை மற்றும் இதர பரிகாரங்களுக்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வா.சா.1, 2 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் 14 வரை ஆவணங்களும், நீதிமன்ற

ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் நீ.ம.சா.ஆ.1 முதல் 3 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, வாதி தரப்பு சாட்சியத்திற்காக வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. இ.ம.எண்.43/16 மனுவில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு மனுதாரர் தரப்பில் எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்கப்படவில்லை. நீதிமன்ற ஆணையரை இந்நீதிமன்றத்தில் சாட்சியாக வரவழைக்கப்பட்டு, ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் குறைபாடுகள் இருப்பதாக மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்படவில்லை. சர்வே எண்.176/1, 176/3A சொத்துக்கள் ஏற்கனவே வருவாய்த்துறையினரால் உட்பிரிவு செய்யப்பட்டதன் பேரில் தான் தாவா சொத்துக்களைப் பொறுத்து பிராதில் சொத்து விபரமாக காட்டப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தாவா சொத்துக்கள் கிராம நிர்வாக அதிகாரி மற்றும் சர்வேயர் உதவியுடன் தான் அளக்கப்பட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடமான நீ.ம.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்களுக்கு மனுதாரர்கள் தரப்பில் எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்கப்படாமல் புதிதாக நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய வேண்டுமென்று மனுதாரர்கள் கோரும் பரிகாரத்தில் எவ்வித முகாந்திரமும் இல்லை. என்ன காரணத்திற்காக புதிய நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய வேண்டுமென்று காரணங்கள் ஏதும் இல்லை என்பதால் இம்மனு ஏற்புடையதாக இல்லை. மனுவில் சொல்லப்பட்டுள்ள காரணங்களும் இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் தரப்பினரிடையே ஏற்பட்டுள்ள பிரச்சனைகளுக்கு சரியான தீர்வு எவ்வாறு காண முடியும்

என்று மனுதாரர்கள் தரப்பில் எவ்வித ஆவணங்களும், சாட்சியங்களும் முன்னிலைப்படுத்தாத நிலையில் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், வழக்கானது எட்டு வருடங்களுக்கு மேலாக நிலுவையில் இருந்து வருவதால் மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவின்படி விரைந்து முடிக்க வேண்டியதாக உள்ளது. இம்மனுவானது அசல் வழக்கினை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்திற்காக தாக்கல் செய்யப்பட்ட மனு என்றும், இம்மனுவினை அனுமதிப்பதற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்றும் இம்மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டியது அவசியம் என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவில், வழக்கின் சூழ்நிலை மற்றும் சங்கதிகளை கருத்திற்கொண்டு மனு செலவு தொகையின்றி தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின்னர் அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024 ம் ஆண்டு **நவம்பர்** திங்கள் **14 ம் நாள்** அவையறிய பகரப்பட்டது.

(S/d).M.சண்முகவேல்ராஜ், (14.11.2024)
சார்பு நீதிபதி, இராஜபாளையம்.

மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி - இல்லை.

மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்

ம.சா.ஆ.1 - புகைப்படங்கள் மற்றும் சி.டி.

எதிர்மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி - இல்லை.

எதிர்மனுதாரர்/வாதி தரப்பு மற்றும் சான்றாவணங்கள் -

எ.ம.சா.ஆ.1 - நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் நகல்

(S/d).M.சண்முகவேல்ராஜ், (14.11.2024)
சார்பு நீதிபதி, இராஜபாளையம்.